முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2016 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2016-07-16
காலை
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண் டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள எட்டு (08) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.3*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றிற்கு எதிரே நீர் தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பிந்திய கீழ்வரும் நிகழ்வுகளில் எவை LKAS 10 – அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பிந்திய நிகழ்வுகள் எனும் நியமத்திற்கு அமைய செம்மையாக்கப்படாத நிகழ்வு களாகக் (non – adjusting events) கொள்ளப்படும்?

**(a)** அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பின்னர் பிரகடனப்படுத்திய பங்கிலாபம்.

**(b)** அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பின்னர் பாரிய உற்பத்திப் பொறித்தொகுதி ஒன்று தீயினால் அழிவடைதல்

(1) **(a)** மட்டும் (2) **(b)** மட்டும்

(3) **(a)** மற்றும் **(b)** இரண்டும் (4) மேற்கூறிய எவையுமன்று (02 புள்ளிகள்)

**1.2** கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2016 யூன் மாதத்திற்காக **வரையறுக்கப்பட்ட X கம்பனியின்** சம்பளப் பட்டியலிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| ஊழியரின் மொத்தச் சம்பளம் (Gross salaries) | 575,000 |
| சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட கடன் தவணைக் கொடுப்பனவுகள் | 75,000 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில் தருநரின் பங்களிப்பு | 69,000 |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் பங்களிப்பு | 46,000 |
| ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில் தருநரின் பங்களிப்பு | 17,250 |
| ஊழியரிடமிருந்து கழிக்கப்பட்ட PAYE | 20,000 |

2016 யூன் மாதத்திற்காக ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிகரச் சம்பளம் என்ன?

(1) ரூ. 434,000/-. (2) ரூ. 416,750/-. (3) ரூ. 347,750/-. (4) ரூ. 454,000/-.

(02 புள்ளிகள்)

**1.3** ஒரு தனியுரிமையாளர் வியாபாரத்தின் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | **ரூ.** |
|---|---|
| 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி மூலதனம் | 250,000 |
| ஆண்டின்போது உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம் | 50,000 |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் | 30,000 |
| 2016 மார்ச் 31 ஆந் திகதி மூலதனம் | 400,000 |

வியாபாரத்தின் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் என்ன?

(1) ரூ. 70,000/-. (2) ரூ. 130,000/-. (3) ரூ. 270,000/-. (4) ரூ. 230,000/-.

(02 புள்ளிகள்)

***1.4** முதல் **1.8** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்கு வரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.4** பங்குடமை வியாபாரமொன்றின் நன்மதிப்பு மதிப்பிடப்பட்டு கணக்கேடுகளில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டிய இரண்டு (02) சந்தர்ப்பங்களைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

**1.5** ஒரு பங்குடமையின் நன்மதிப்பு மதிப்பிடப்படும் இரண்டு (02) முறைகளைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

**1.6** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள் )

**1.7** பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் மூன்று(03) குணவியல்புகளைக் **குறிப்பிடுக**.(03 புள்ளிகள்)

**1.8** ஒரு கம்பனி பொருள் **X** இனை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியானது 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒவ்வொன்றும் ரூ. 190,000/- கிரயமான 700 அலகுகள் பொருள் **X** இனை அதன் தொக்கில் கொண்டிருந்தது. தொக்குகளை மதிப்பிடுதலில், கம்பனி முதல் உள் - முதல் வெளி (FIFO) முறையினைப் பயன்படுத்துகிறது. 2016 ஏப்ரல் மாதத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் இடம்பெற்றன :

| **திகதி** | **விபரம்** | **அலகுகள்** | **அலகு விலை (ரூ.'000)** |
|---|---|---|---|
| 2016 ஏப்ரல் 11 | கொள்வனவு | 400 | 225 |
| 2016 ஏப்ரல் 15 | விற்பனை | 750 | 320 |

2016 ஏப்ரல் மாதத்திற்கான கம்பனியின் மொத்த இலாபத்தினை (gross profit) கணிக்குக.(04 புள்ளிகள்)

*பகுதி A யின் முடிவு*

## பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

2016 மார்ச் 31 ஆந் திகதி **வின்டி ஹை டீ** கம்பனியின் வங்கிக் கூற்று மீதியானது கம்பனியின் காசேட்டின் படியான வங்கி மீதி ரூ. 107,000/- (சாதக) உடன் இணங்கவில்லை. அந்தத் திகதியில் வங்கிக் கூற்றானது ரூ. 227,000 சாதகமான மீதியினைக் காட்டியது.

பின்னர் மேற்கொண்ட மீளாய்விலிருந்து கீழ்வருவன அவதானிக்கப்பட்டன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையில், விநியோகிக்கப்பட்ட கீழ்வரும் காசோலைகள் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| காசோலை இல. | வழங்கிய திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 750298 | 2016.03.25 | 5,500 |
| 750307 | 2016.03.28 | 70,000 |
| 750136 | 2016.03.30 | 83,000 |

(2) கீழே தரப்பட்டுள்ள காசோலை வைப்பு 2016 மார்ச் மாதத்தில் தேறியிருக்கவில்லை :

| காசோலை இல. | வைப்பிலிட்ட திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 345675 | 2016.03.30 | 25,000 |

(3) 2016 மார்ச் 30 ஆந் திகதி வங்கியானது ரூ. 11,000/- இனை தவறுதலாக **வின்டி ஹை டீ** கம்பனியின் வங்கிக் கணக்கில் வரவுப் பதிவு செய்திருந்தது.

(4) 2016 மார்ச் மாத வங்கிக் கட்டணம் ரூ. 2,500/- காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

**நீர் செய்யவேண்டியது,**

**வின்டி ஹை டீ கம்பனிக்கு** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி செம்மையாக்கிய காசேடு

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (05 புள்ளிகள்)

### வினா 03

காகிதாதிகளின் மொத்த வியாபாரமான **சண் புக்ஸ்** இன் 2016 மார்ச் 01 ஆந் திகதியில் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 2,350,000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 1,780,000 |

2016 மார்ச் மாதத்தின்போது **சண் புக்ஸ்** இன் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் தொடர்புபட்ட ஊடுசெயல்கள் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| கடன் அடிப்படையில் காகிதாதிகள் கொள்வனவு | 5,200,000 |
| கடன் அடிப்படையில் காகிதாதிகள் விற்பனை | 4,800,000 |
| திருப்பி அனுப்பப்பட்ட கடன் கொள்வனவுகள் | 750,000 |
| கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவு | 300,000 |
| கடன்கொடுத்தோருக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவு | 3,200,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற தொகை | 4,200,000 |
| பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் | 80,000 |

***நீர் செய்யவேண்டியது,***

2016 மார்ச் மாதத்திற்கு **சண் புக்ஸ்** க்கு கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (02 புள்ளிகள்)

(b) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**அமிந்தவும் துமிந்தவும்** இலாப, நட்டங்களை முறையே 3 : 2 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடமை வியாபாரமொன்றில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் **அமிந்த** பங்குடமை வியாபாரத்தில் தான் செலவிடும் காலத்தை மட்டுப்படுத்த விரும்பியதன் காரணமாக இலாப, நட்டப் பகிர்வு விகிதத்தினை முறையே 1 : 3 எனும் விகிதத்திற்கு மாற்றுவதற்கு இணங்கப்பட்டது.

2016 ஏப்ரல் 01 ஆந் திகதி பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 2,400,000/- ஆக மதிப்பிடப்பட்டது. கணக்கேடுகளில் நன்மதிப்பினைக் காட்டுவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டது.

***நீர் செய்யவேண்டியது,***

பங்குடமையின் நன்மதிப்பினைப் பதிவு செய்து, நீக்குவதற்கான (record and eliminate) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக**. (05 புள்ளிகள்)

## வினா 05

**கிறீன் விளையாட்டுக் கழகத்தின்** 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| **வருமானம்** | **ரூ. '000** |
|---|---|
| சந்தாப்பணம் | 720 |
| அன்பளிப்புகள் | 300 |
| **மொத்த வருமானம்** | **1,020** |
| **கழி : செலவுகள்** | |
| வாடகை | 300 |
| சம்பளங்கள் | 140 |
| ஏனைய செலவுகள் | 120 |
| **மொத்தச் செலவினம்** | **560** |
| **மிகை** | **460** |

விளையாட்டுக் கழகத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு:

*(ரூ.'000)*

| | **2015 சனவரி 01** | **2015 டிசெம்பர் 31** |
|---|---|---|
| முன்னதாகப் பெறப்பட்ட சந்தாப்பணம் | 500 | 320 |
| நிலுவையாக இருந்த சந்தாப் பணம் | 350 | 230 |
| செலுத்தப்பட வேண்டிய சம்பளம் | 70 | 120 |
| வங்கி மீதி | 2,500 | ? |

***நீர் செய்யவேண்டியது,***

2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **கிறீன் விளையாட்டுக் கழகத்தின்** கொள்ளல், கொடுத்தற் கணக்கினைத் (Receipts and payments account) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

**லக் என்டர்பிரைசஸ்** நிறுவனம் அதன் பழைய விநியோக வான் ஒன்றினை விற்று அதற்குப் பதிலாக புதிய விநியோக வான் ஒன்றினைக் கொள்வனவு செய்தது. அது பற்றிய விபரங்கள் வருமாறு :

(1) 2011.01.01 ஆந் திகதி ரூ. 2,500,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பழைய விநியோக வான் 2016 மார்ச் 01 ஆந் திகதி ரூ. 700,000/- க்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(2) புதிய விநியோக வான் 2016 மார்ச் 01 ஆந் திகதி ரூ. 3,600,000/- கிரயத்தில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டு அன்றிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**லக் எண்டபிரைசஸின்** கொள்கையானது மோட்டார் வாகனங்களை கிரயத்தில் ஆண்டிற்கு 25% இல் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்வதாகும்.

***நீர் செய்யவேண்டியது,***

2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது மேற்படி ஊடுசெயல்கள் தொடர்புபட்ட பதிவுகளை மேற்கொள்வதற்குத் தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் **தயாரிக்குக.**

*(காசு ஊடுசெயல்கள், விநியோக வானின் விற்பனை மீதான இலாபம் / நட்டம், மோட்டார் வாகனத் தேய்மானம் ஆகியன அடங்கலாக)* (05 புள்ளிகள்)

*பகுதி B யின் முடிவு*

## பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**அனுர, பினுர,** மற்றும் **வினுர** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடமை வியாபாரம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றைக் கொண்டிருக்கிறது :

- பங்காளர்கள் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் தாம் கொண்டுள்ள மூலதனக் கணக்கு மீதியில் ஆண்டிற்கு 5% வட்டி பெறுவதற்கு உரத்துடையவர்களாவர்.
- **பினுர** ஆண்டிற்கு ரூ. 75,000/- சம்பளம் பெற உரித்துடையவராவார்.

2015 ஏப்ரல் 01 ஆந் திகதியில் பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள் கீழ்வருமாறு :

| | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| பங்காளர்கள் மூலதனக் கணக்கு: | | |
| **அனுர** | | 4,000 |
| **பினுர** | | 2,400 |
| **வினுர** | | 1,800 |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு: | | |
| **அனுர** | | 230 |
| **பினுர** | | 160 |
| **வினுர** | 50 | |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி **வினுர** பங்குடமையிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானிததுடன், ஏனைய பங்காளர்கள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கினர் :

- இலாப, நட்டங்கள் சமமாகப் பகிரப்படல்
- மூலதன மீதி மீதான வட்டியும், **பினுரவின்** சம்பளமும் எதுவித மாற்றமுமின்றி முன்னைய உடன்படிக்கைக்கு அமையச் செலுத்தப்படுவதற்கு
- பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 1,000,000/- ஆக மதிப்பிடப்பட்டு, நன்மதிப்புக் கணக்கினைத் திறக்காது பங்காளர் மூலதனக் கணக்குகளின் ஊடாக வேண்டிய செம்மையாக்கங்களை மேற்கொள்வதற்கு
- 2016 மார்ச் 31 ஆந் திகதி நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கீழ்வருமாறு மீள்மதிப்பீடு செய்வதற்கு :

| | **2016 மார்ச் 31 இல் மீள்மதிப்பீடு (ரூ.)** | **கிரயம் (ரூ.)** | **2016 மார்ச் 31 இல் திரள் தேய்மானம் (ரூ.)** |
|---|---|---|---|
| காணி | 3,200,000 | 3,000,000 | - |
| கட்டடம் | 4,250,000 | 4,500,000 | 1,000,000 |
| பொறித்தொகுதி | 1,000,000 | 2,500,000 | 1,250,000 |

- நடைமுறையல்லாச் சொத்துக்கள் பங்குடமையின் கணக்கேடுகளில் மீள்மதிப்புப் பெறுமதி யில் முன்கொண்டு செல்வதற்கு
- பங்குடமையிலிருந்து ஓய்வுபெறும் பங்காளருக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை அந்தப் பங்காளரினால் பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடனாகக் கொள்வதற்கு

(2) பங்குடமையின் 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் (பகிர்வுக்கு முந்திய) ரூ. 500,000/-.

**நீர் செய்யவேண்டியது,**

2016 மார்ச் 31 ஆந் திகதியில் நிரல் வடிவில் கீழ்வருவனவற்றினைத் **தயாரிக்குக** :

(a) பங்காளர் நடைமுறைக் கணக்கு

(b) பங்காளர் மூலதனக் கணக்கு (10 புள்ளிகள்)

## வினா 08

**சிக்குறு கழகம்** ஒரு விளையாட்டுக் கழகமாகும். அத்துடன் அது ஒவ்வொரு ஆண்டும் நாடகங்களை ஒழுங்கு செய்கிறது. 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **சிக்குறு கழகத்தின்** கொள்ளல், கொடுத்தற் கணக்கு (Receipts and Payments Account) கீழ்வருமாறு :

**கொள்ளல், கொடுத்தற் கணக்கு** *(ரூ.'000)*

| | | | |
|---|---|---|---|
| 2015.01.01 இல் மீதி | 7,500 | | |
| அன்பளிப்புகள் | 6,300 | அலுவலகக் கட்டட வாடகை | 3,600 |
| நாடக நுழைவுச்சீட்டு விற்பனை | 6,800 | நாடகத் தயாரிப்புக் கிரயம் - 2015 | 3,800 |
| அங்கத்துவக் கட்டணம் | 50,400 | வெளிவாரிக் கலைஞர்களின் கட்டணம் | 1,200 |
| | | காகிதாதிகள், அச்சிடல் மற்றும் விளம்பரம் | 2,100 |
| | | ஏனைய செலவுகள் | 7,100 |
| | | கொட்டகை உபகரணக் கொள்வனவு | 15,000 |
| | | 2015.12.31 இல் மீதி | 38,200 |
| | **71,000** | | **71,000** |

2015 சனவரி 01 மற்றும் 2015 டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் **சிக்குறு கழகத்தின்** ஏனைய சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

*(ரூ.'000)*

| | **2015 சனவரி 01 இல்** | **2015 டிசெம்பர் 31 இல்** |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| கொட்டகை உபகரணங்கள் | - | 15,000 |
| நிலுவையிலுள்ள அங்கத்துவக் கட்டணம் | 500 | 300 |
| முன்னதாகச் செலுத்தப்பட்ட வாடகை | 2,800 | 2,200 |
| **பரிப்புக்கள் :** | | |
| வெளிவாரிக் கலைஞர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 1,200 | 1,400 |
| செலுத்த வேண்டிய நாடகத் தயாரிப்புச் செலவுகள் | 1,200 | 2,200 |

கீழுள்ள மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- பெறப்படும் அன்பளிப்புகள் அவை பெறப்படும் ஆண்டிலேயே வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.
- கொட்டகை உபகரணக் கொள்வனவு 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

**நீர் செய்யவேண்டியது,**

**சிக்குறு கழகத்திற்காகப்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கு

(b) 2015 டிசெம்பர் 31 இல் நிதிநிலைக் கூற்று (10 புள்ளிகள்)

## வினா 09

சீனி மொத்த விற்பனையாளரான **பிரகாசுக்குச்** சொந்தமான **பிரகாஷ் டிரேடர்ஸ்** இன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழ்வருமாறு :

| | **2015 சனவரி 01 இல் (ரூ.)** | **2015 டிசெம்பர் 31 இல் (ரூ.)** |
|---|---|---|
| வியாபார வருமதிகள் | 2,250,000 | 1,570,000 |
| வியாபாரச் சென்மதிகள் | 1,220,000 | 3,100,000 |
| அட்டுறு செலவுகள் | 52,000 | 26,000 |
| வங்கி மீதி | 175,000 | ? |
| தொக்கு | 550,000 | 720,000 |

2015 ஆம் ஆண்டில் வியாபாரத்தின் கீழ்வரும் ஊடுசெயல்கள் பிரித்தறியப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| கொள்வனவு | 26,690,000 |
| விற்பனை | 34,100,000 |
| ஏனைய செலவுகள் | 2,572,000 |

**பிரகாஷ் டிரேடர்ஸ்** ஆண்டின்போது எல்லாப் பணச் சேகரிப்புகளையும் வங்கியில் வைப்புச் செய்து, சகல கொடுப்பனவுகளையும் காசோலை மூலம் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொண்டது.

கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின்போது வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 3,100/-. இது ஏடுகளில் பதியப்படவில்லை.

(2) சகல விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(3) ஆண்டின்போது **பிரகாஷ்** மேலதிக மூலதனமாக ரூ. 500,000/- இனை வியாபாரத்தில் உள்ளிட்டதுடன், காசு எடுப்பனவாக ரூ. 300,000/- இனை வியாபாரத்திலிருந்து எடுத்திருந்தார்.

(4) ஒரு கொள்கையாக அவர் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் எதனையும் கொள்வனவு செய்யவில்லை. பதிலாக அத்தகைய சொத்துக்கள் முழுவதையும் வாடகைக்குப் பெற்றிருந்தார். அவற்றிற்காகச் செலுத்தப்பட்ட வாடகைகள் ஏனைய செலவுகளில் உட்படுத்தப்பட்டுள்ளன.

***நீர் செய்யவேண்டியது,***

2015 டிசெம்பர் 31 ஆந் திகதியில் **பிரகாஷ் டிரேடர்ஸ்** இன் பரீட்சை மீதியினைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

*பகுதி C யின் முடிவு*

# <u>பகுதி D</u>

இந்தப் பகுதியிலுள்ள வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்

(25 புள்ளிகள்)

## வினா 10

**வரையறுக்கப்பட்ட புளூகோ (தனியார்) கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து 2016 மார்ச் 31 இல் பிரித்தறியப்பட்ட பரீட்சைமீதி கீழ்வருமாறு :

*(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 35,000 |
| 2015 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 15,600 |
| பொது ஒதுக்கம் | | 7,500 |
| 10% தனிச்சங்கள் | | 8,000 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணி | 43,000 | |
| கட்டடம் | 20,500 | |
| மோட்டார் வாகனங்கள் | 4,500 | |
| 2015 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம்: | | |
| கட்டடம் | | 3,750 |
| மோட்டார் வாகனங்கள் | | 2,000 |
| தொக்குகள் - 2016 மார்ச் 31 இல் | 6,200 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 5,650 | 1,880 |
| வங்கி மீதி | 950 | |
| விற்பனைகள் | | 25,000 |
| விற்பனைக் கிரயம் | 10,700 | |
| நிருவாகச் செலவுகள் | 3,920 | |
| விநியோகச் செலவுகள் | 2,800 | |
| தனிச்ச வட்டி | 400 | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 110 | |
| **மொத்தம்** | **98,730** | **98,730** |

கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன :

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும். இந்தச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

கட்டடம் : 20 ஆண்டுகள்

மோட்டார் வாகனங்கள் : 4 ஆண்டுகள்

(2) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் முற்கொடுப்பனவுகள் மற்றும் அட்டுறு செலவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் :

| | ரூ. |
|---|---|
| வாடகை முற்கொடுப்பனவு | 25,000 |
| மின்சாரம் - அட்டுறு செலவு | 8,000 |

(3) வருமான வரி தொடர்புபட்ட தகவல்கள் :

- வரிமதிப்பாண்டு 2015/16 க்கு மதிப்பிடப்பட்ட வருமான வரிப் பரிப்புக்கள் ரூ. 250,000/-. இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- இந்தக் கணக்கீட்டு ஆண்டின்போது செலுத்தப்பட்ட சகல வருமான வரிக் கொடுப்பனவுகளும் வருமான வரிக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- வரிமதிப்பாண்டு 2014/15 க்கான வருமான வரிக் குறை ஏற்பாடு ரூ. 50,000/- செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும்.

(4) 2016 மார்ச் 31 ஆந் திகதி **பெரேரா**விடமிருந்து வருமதியாகவிருந்த வியாபார வருமதிகள் மீதி ரூ.50,000 இனை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் நிலுவையிலுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயுறவுக்கடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(5) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி கம்பனியானது 80,000 தனிச்சங்களை ஒவ்வொன்றையும் சம பெறுமதியான ரூ. 100/- க்கு வழங்கியது. இதன் மீதான வட்டி, ஆண்டிற்கு இரு தடவை செப்ரெம்பர் 30 மற்றும் மார்ச் 31 ஆகிய திகதிகளில் செலுத்தப்படும். எனினும், 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த அரையாண்டிற்கான வட்டிக்கான காசோலைகள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியே எழுதப்பட்டன.

(6) 2016 ஏப்ரல் 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையானது 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்திலிருந்து சாதாரண பங்கொன்றிற்கு ரூ. 5/- இனை இறுதிப் பங்கிலாபமாகச் செலுத்தத் தீர்மானித்தது.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக பணிப்பாளர் சபையினால் 2016 மே 05 ஆந் திகதி அங்கீகரிக் கப்பட்டது.

**நீர் செய்யவேண்டியது,**

**வரையறுக்கப்பட்ட புளூகோ (தனியார்) கம்பனியின்** முகாமையின் பயன்பாட்டிற்காகக் கீழ்வருவன வற்றினைத் **தயாரிக்குக.** :

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி நிதி நிலைக் கூற்று (13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D யின் நிறைவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |